புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2024** **02 ஏப்ரல், 2025**

# பத்திரிகை செய்தி

மத்திய வர்த்தக அமைச்சகத்தின் மெட்ராஸ் ஏற்றுமதி மேம்பாட்டு மண்டல வளர்ச்சி ஆணையர் திரு அலெக்ஸ் பால் மேனன், இணை ஆணையர் திரு. ஆர்த்தர் ஓர்ச்சியுவோ ஆகியோர் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு. K. கைலாஷ்நாதன் அவர்களை ஆளுநர் மாளிகையில் சந்தித்துப் பேசினார். புதுச்சேரி அரசு வளர்ச்சி ஆணையர் திரு ஆஷிஷ் மாதவராவ் மோரே, துணைநிலை ஆளுநரின் செயலர் டாக்டர் மணிகண்டன் ஆகியோர் உடனிருந்தார்.

சந்திப்பின்போது, தமிழ்நாடு, அந்தமான் மற்றும் புதுச்சேரியை உள்ளடக்கிய மண்டலத்தில் ஏற்றுமதி வளர்ச்சியில் எம்.இ.பி.இஜட் அமைப்பின் பங்களிப்பு குறித்து அதிகாரிகள் விவரித்தனர். மேலும், புதுச்சேரியில் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை, குறிப்பாக தோல்பொருள் அல்லாத மற்ற காலணி தயாரிப்புகள் மற்றும் கடல்சார் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இது தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்க எம்.இ.பி.இஜட் அதிகாரிகளை துணைநிலை ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

புதுச்சேரியில் ஏற்றுமதி வளர்ச்சி, மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும். குறிப்பாக தற்போது பெங்களூரு, சென்னை போன்ற பெருநகரங்களில் பணிபுரியும் புதுச்சேரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும். அதுமட்டுமல்லாமல் புதுச்சேரியில் சுற்றுலாவை மேம்படுத்தவும் இது உதவும்.

புதுச்சேரி அரசுக்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு அளிக்கவும் இது குறித்து இளைஞர்கள் மத்தியில் தகவல் பலவலை ஏற்படுத்தவும் எம்.இ.பி.இஜட் அதிகாரிகள் உறுதி அளித்தனர்.